**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 140** **நாள் : 20.10.2016**

## பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை சார்பில் டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்

-----

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பாக சென்னை முழுவதும் நோய்த்தடுப்பு மற்றும் டெங்குகாய்ச்சல் தடுப்பு சம்பந்தமாக விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

டெங்கு காய்ச்சல் பரவுவதற்கு காரணமாக இருக்கும் ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் குறித்தும், அதனை தடுக்கும் முறைகள் குறித்தும் விளக்கும் படத்துடன் கூடிய 12 இலட்சத்திற்கும் அதிகமான துண்டுப் பிரசுரங்கள் இந்த ஆண்டு துவக்கம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையினரால் சென்னை மாநகர் முழுவதும் அனைத்து வீடுகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், 1 முதல் 15 மண்டலங்களில், 270 எண்ணிக்கையிலான மாநகரப் பேருந்துகளின் பின்பகுதியில் டெங்கு விழிப்புணர்வு குறித்த விளம்பர பலகைகள் பொருத்தப்பட்டு, தொடர்ந்து 30 நாட்களுக்கு விழிப்புணர்வு விளம்பரம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு அளிப்பதில் ஒரு பகுதியாக டெங்கு விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் குறுஞ்செய்திகள் வாயிலாக சென்னை மாநகரில் உள்ள 70 இலட்சம் கைபேசிகளுக்கு அனுப்பப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இன்று (20.10.2016) பெருநகர சென்னை மாநகராட்சி ‘‘தீ கேன்டில்ஸ்’’ என்ற அரசு சாரா அமைப்பினரை இணைத்து சென்னை–வேப்பேரியில் உள்ள பென்டிங் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ‘‘வீ எலிமினேட் மஸ்கிடோஸ்’’ (WE ELIMINATE MOSQUITOES) என்ற வடிவில் மாணவியர்களை ஒருங்கிணைத்து டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. இதில் சுகாதார கல்வி அலுவலர் அவர்களால் வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் கொசுப்புழு மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள், அதனை தடுக்கும் முறைகள் குறித்து மாணவியர்களுக்கு விளக்கப்பட்டது. மேலும் மாணவியர்கள் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு மற்றும் தூய்மை இந்தியா உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாணவியர்களுக்கு நிலவேம்பு குடிநீரும் வழங்கப்பட்டது. இதில் சுமார் 1530 மாணவியர்கள் கலந்து கொண்டனர். டெங்கு கொசு வேடமிட்ட மாநகராட்சி பணியாளரால் பள்ளி மற்றும் அருகில் உள்ள பேருந்து நிலையத்தில் டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இதில் பள்ளியின் தலைமை ஆசிரியை, சுகாதார ஆய்வாளர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:** **துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**